# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 22.07.2026**

**அசல் வழக்கு எண். 16/2015**

**வா.சா.2 (கமலா) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி எது சம்பந்தமாக வழக்க தாக்கல் சயெ்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாதியின்ட வீடு தொடர்பான இடத்து பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை வாதி யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வாதியின் இடத்தில் அவர் அனுபவம் செய்வதை அருகில் இருந்தவர்கள் இடையூறு செய்ததால் அவர்களுக்கு எதிராகவும் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தவாசொத்தின் சர்வே எண் என்னவென்றால் அதன் சர்வே எண்.1354/1 ஆகும். மேற்கண்ட இடம் யார் பெயரில் உள்ளது என்றால் மின்னல்கொடி பெயரில் உள்ளது. சர்வே எண்.1354 ல் உள்ள இடம் சர்க்கார் மனை என்றால் சரியல்ல. சர்வே எண்.1354 ல் உள்ள 40 செண்ட் இடம் சர்க்காருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மேற்கண்ட 40 செண்ட் இடத்தில் 5 செண்ட் இடத்தைபிரித்து அதற்கு சர்வே எண்.1354/1 என உட்பிரிவு செய்து மின்னல்கொடிக்கு அரசாங்கம் வழங்கியது என்றாலும் சரியல்ல. மேற்கண்ட 5 ச்செணட் இடத்தை தவிர்த்து மீதமுள்ள இடத்தை சட்டத்திற்கு புறம்பாக அபகரிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் வாதியின் உறவினர் என்றால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறனே் என்றாலும் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**